வடலூர் தனியார் பள்ளியில் விளையாட்டு பயிற்சியின் போது எதிர்பாராத விதமாக தலையில் ஈட்டி பாய்ந்து உயிரிழந்த மாணவன் கிஷோர் இல்லத்திற்கு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் ,கடலூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மாணவன் கிஷோரின் தந்தையார் திருமுருகன் அவர்களுக்கு ஆறுதல் கூறினார். உடன் குறிஞ்சிப்பாடி தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் வி.சிவகுமார், குறிஞ்சிப்பாடி வடக்கு ஒன்றிய செயலாளர் நாராயணசாமி, கடலூர் மாநகர செயலாளர் கே.எஸ்.ராஜா, பொதுக்குழு உறுப்பினர்கள் கே.பி.ஆர்.பாலமுருகன், கண்ணன், வடலூர் நகர மன்ற தலைவர் சு.சிவகுமார், வடலூர் நகர கழக செயலாளர் தன.தமிழ்செல்வன், பேரூர் கழக செயலாளர் சங்கர், பேரூர் கழக அவைத் தலைவர் ராமர், நகர மன்ற துணைத் தலைவர் சுப்பராயலு மற்றும் வடலூர் நகர மன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

ஆகஸ்டு 7 - முத்தமிழறிஞர் கலைஞர் 6 ஆம் ஆண்டு நினைவு நாள்!

உதகையில் - கலைஞர் திருவுருவச் சிலைக்கு மலரஞ்சலி!

நீலகிரி மாவட்டக் கழகத்தினருக்கு - மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் வேண்டுகோள்!

நீலகிரி, ஆக. 6

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 6-ஆம் ஆண்டு நினைவுநாளையொட்டி உதகையில் கலைஞர் திருவுருவச் சிலைக்கு மலரஞ்சலி செலுத்த வருமாறு மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

திராவிட இயக்கத்தின் மூத்த தலைவராக திகழ்ந்து, இந்திய அளவில் அனைத்து மாநிலங்களிலும், முதன்மை மாநிலமாக தமிழகத்தை திகழவைக்கும் முதல்வர் தளபதி அவர்களை நமக்கு தந்தவர்.

ஐந்து முறை தமிழ்நாட்டின் முதல்வராக இருந்ததோடு, தொடர்ந்து இந்திய அரசியல் வரலாற்றில் சட்டமன்ற உறுப்பினராக போட்டியிட்ட அனைத்து தேர்தல்களிலும் வெற்றி கண்டு ஒவ்வொரு கழக தொண்டனுக்கும் பெருமை சேர்த்து, தமிழ்நாடு அனைத்து துறைகளிலும் இன்றும் சிறப்பு பெற்றிட அடித்தளமாக திகழ்ந்தவர்.

திராவிட முன்னேற்ற கழகம் எனும் பேரியக்கத்தை கண்ட பேரறிஞர் அண்ணா வழியில் அயராது உழைத்து கழகத்தையும், கழக கொள்கைகளையும் தன் கண் இமை மூடும் கடைசி நொடி வரையிலும் பாதுகாத்து, தமிழ் மொழிக்காக, தமிழினத்திற்காக உழைத்த நம் நெஞ்சத்தை விட்டு அகலாத தலைவர் கலைஞர் அய்யா அவர்களின் 6வது நினைவு நாளில் புகழஞ்சலியை செலுத்திடுவோம்.

கழக தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல்படி, கலைஞர் அவர்களின் திருவுருவ சிலைக்கும், நீலகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளிலும் கலைஞர் அய்யா

அவர்களின் திருவுருவ படங்களை அலங்கரித்து வைத்தும் மலர் அஞ்சலி செலுத்திட அன்புடன் வேண்டுகிறேன்.

அதன்படி, நாளை (07.08.2024 - புதன்கிழமை காலை 11.30 மணியளவில், மாவட்ட கழக அலுவலக முகப்பில் உள்ள தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவ சிலைக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

இதனை தொடர்ந்து மாவட்டத்திலுள்ள அனைத்து நகர - ஒன்றிய - பேரூர் - கிளை கழகங்களிலும் கலைஞர் அவர்களின் திருவுருவப் படங்களை அலங்கரித்து வைத்து நம் இதய தலைவர் அவர்களுக்கு நம் மரியாதையை செலுத்திட வேண்டுவதோடு, அனைத்து பகுதிகளிலும் ஆதரவற்ற முதியோர் இல்லங்களுக்கு உணவு, பழங்கள், கம்பளி போர்வைகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகள் நடத்தியும், தலைவர் கலைஞரின் நினைவுநாள் நிகழ்ச்சிகள் மாவட்டத்தில் சிறப்புற நடைபெற தேவையான ஏற்பாடுகளை தொடர்புடைய நகர - ஒன்றிய - பேரூர் - கிளை கழக செயலாளர்கள் சிறப்புடன் செய்து உதவிட அன்புடன் வேண்டுகிறேன்.

இவ்வாறு பா.மு.முபாரக் தெரிவித்துள்ளார்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் 6ஆம் ஆண்டு நினைவு தினம்!

புதுக்கோட்டையில் அமைதிப் பேரணி! கலைஞர் சிலைக்கு மாலை அணிவிப்பு!

புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் அறிவிப்பு!

புதுக்கோட்டை, ஆக. 6 -

புதுக்கோட்ட வடக்கு மாவட்டச் செயலாளர் கே. கே.செல்லப்பாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டின் அரசியல் வரவாற்றில் அரசியல் களத்திலும் சட்டமன்ற ஜனநாயகத்திலும் மகத்தான சாதனைகள் படைத்த பன்முக ஆற்றலை தன்னகத்தே பெற்றிருந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் நிளனவு நாள் என்பது மட் டுமல்லாமல் தமிழ்நாட்டு மக்கள் நினைவில் நிலை கொண்டிருப்பவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

தொடர்ந்து 13 முறை

சட்டமன்ற உறுப்பினராகவும், 5 முறை முதலமைச்சராக இருந்து தந்தை பெரியாருடைய சமூநீதி கொள்கைக்கும் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய உயர்ந்த ஜனநாயக கோட்பாடுகளுக்கும் சட்ட வடிவமும், ஜனநாயக கோட்பாடுகளுக்கும் சட்ட வடிவமும், கொடுத்த தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 6ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நாளை (7.8.2024 - புதன்கிழமை) காலை 9.30 மணியளவில் அமைதி ஊர்வலம் புதுக்கோட்டைக்கு கீழ ராஜா வீதி அண்ணா சிலையிலி ருந்து புறப்பட்டு கீழ ராஜவீதி வடக்கு ராஜ வீதி வழியாக மாவட்ட திமுக அலுவலகம் சென்றடைகிறது. மாவட்ட திமுக அலுவலகத்தில் உள்ள முத்தமிழறி ஞர் கலைஞர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது.

இந்நிகழ்வுகளில் மாநில , மாவட்ட நிர்வாகிகள் , முன்னாள், இந்நாள் சட்டமன்ற , நாடாளு மன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் , மாநகர, ஒன்றிய , பேரூர், கிளைக் கழக செயலாளர்கள் , நிர்வாகிகள், மாநகராட்சி மேயர், துணை மேயர் , ஒன்றியப் பெருந்தலைவர்கள், துணைப் பெருந்தலைவர்கள் , மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் , துணை அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதி கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறி உள்ளார்.

எம்.பி.பி.எஸ். வினாத்தாள் கசிவு!

புதுச்சேரி அரசு விளக்கம் தரவேண்டும்!

பேரவையில் இரா.சிவா வலியுறுத்தல்!

புதுச்சேரி, ஆக. 6 -

புதுவை மத்திய பல்கலைக்கழகத்தில் எம்.பி.பி.எஸ் வினாத்தாள் கசிந்தது தொடர்பாக புதுச்சேரி அரசு தகுந்த விளக்கத்தை அளிக்க வேண்டும் என சட்டப்பேரவையில் சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் இரா. சிவா வலியுறுத்தியுள்ளார்.

புதுச்சேரி சட்டப்பேரவை பட்ஜெட் கூட்டத்தொடரின் நான்காவது நாளான இன்று ஆளுநர் உரைக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் போது குறுக்கிட்டு பேசிய சட்ட

மனற எதிரககடசி தலைவர் இரா. சிவா,

புதுவை மத்திய பல்கலைக்கழகத்தின் கீழ் அரசு மருத்துவ கல்லூரிகள் உள்பட நான்கு தனியார் மருத்துவ கல்லூரிகள் உள்ளன. இங்கு பயிலும் 830 முதலாமாண்டு எம்.பி.பி.எஸ்., மாணவர்களுக்கு இன்று 5ம் தேதி முதல் முதலாண்டு மருத்துவத் தேர்வு நடக்கும் என அறிவிக்கப்பட்டு இருந்தது.

இந்த தேர்வுகள் அனைத்தும் திடீரென்று ரத்து செய்து இணைப்பு கல்லூரிகளின் டீன்கள், இயக்குநர்களுக்கு சுற்றறிக்கை அனுப்பட்டுள்ள செய்தி அறிந்து மாணவர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

இதற்கு முதலாம் ஆண்டு தேர்வுக்கான கேள்வித்தாள் வெளியானதால் தேர்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும், ஒரு தனியார் மருத்துவ கல்லூரியின் 250 இடங்களில் 150 இடங்களுக்கு மட்டுமே புதுச்சேரி பல்கலைக்கழகம் அப்ளியேட் அளித்துள்ளது மீதமுள்ள 100 இடங்களுக்கு இன்னும் இணைப்பு அங்கீகாரம் அளிக்கவில்லை, அதற்கு அனுமதி அளிக்க காலதாமதம் ஆவதால் தேர்வு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்றும் மாறுபட்ட கருத்தும் உள்ளது.

மேலும் பல்வேறு குற்றச்சாட்டுகள் தொடர்ந்து வெளியாகி வருவது, பல்வேறு சந்தேகங்களை எழுப்பியுள்ளது என்றார். இதுகுறித்து பல்கலைக்கழகத் தரப்பு உரிய விளக்கங்கள் ஏதும் இன்று வரை தருவதில் இழுபறி நீடிக்கிறது.

ஆகவே, இதுகுறித்து புதுச்சேரி அரசு தகுந்த விளக்கத்தை அளிக்க வேண்டும் என்று இந்த அவையின் வாயிலாக கேட்டுக்கொள்கிறேன் என பேசினார்.

இதற்கு பதில் அளித்து பேசிய முதலமைச்சர் ரங்கசாமி, இதுகுறித்து தகவல் தனக்கு தெரியவில்லை என்றும், இதுதொடர்பாக விசாரணை நடத்தி முழு விவரம் தெரிவிக்கப்படும் என தெரிவித்தார்.

கழகத் தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க சேலம் மாவட்டம் வாழப்பாடி ஒன்றியம் ஷேசன்சாவடியில் மக்களுடன் முதல்வர் திட்ட முகாம் நடைபெற்றது. இதில் பொதுமக்களிடம் மனுக்கள் பெறப்பட்டு தீர்வு காணப்பட்டது. இந்த முகாமில் ஒன்றிய செயலாளர்கள் மாதேஸ்வரன், சக்கரவர்த்தி, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் முனைவர் அ.சீனிவாசன் அப்பாதுரை, மற்றும் அரசு அதிகாரிகள் துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

கர்நாடகாவில் நீர் பிடிப்பு பகுதியில் பெய்து வரும் கன மழைகாரணமாக அணைகளில் இருந்து வெளியேற்றப்படும் உபரிநீர் மயிலாடுதுறை மாவட்டம் கொள்ளிடம் ஒன்றியத்தில் கொள்ளிடம் ஆற்றின் வழியாக கடலில் கலக்கிறது. இதையடுத்து கொள்ளிடம் ஒன்றியத்தில் கொள்ளிடம் ஆற்றின் கரையோர கிராமங்களில் நீர் உள் புகுந்ததால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டதையடுத்து கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி பாதிக்கப்பட்ட கிராமங்களை சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பார்வையிட்டு அளக்குடி ஊராட்சி சேத்திருப்பு கிராமத்தில் எஸ்.எம்.எஸ். நடுநிலைப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாமில் தங்கியுள்ளவர்களுக்கு நிவாரண பொருட்களை வழங்கினார். உடன் மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ., ஏ.பி.மகாபாரதி, செல்லசேதுரவிக்குமார், மலர்விழி திருமாவளவன், ஜெயபிரகாஷ் மற்றும் பலர் உள்ளனர்.

முத்தமிழறிஞர் கலைஞரின் 6ஆம் ஆண்டு நினைவு நாள்!

திருப்பூர் தெற்கு மாவட்டத்தில் கலைஞரின் திருவுருவச் சிலைக்கு மரியாதை!

மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன் அறிக்கை!

திருப்பூர், ஆக. 6 -

தமிழ்நாடு, தமிழ், தமிழர் நலன் என மொழி இனப்பெருமை காக்கும் திராவிடப் பேரியக்கமாம் தி.மு.கழகத்தின் சீரிய வரலாற்றில் ஒவ்வொரு நாளுமே சிறப்பு மிக்கது தான். நூறாண்டு கடந்த திராவிட இயக்கத்தின் இலட்சியப் பயணத்தில் முக்கால் நூற்றாண்டுக்கும் மேலாக அயராது உழைத்த, ஒப்பற்ற தலைவர் நம்மில் மறைந்தும் மறையாமலும் வாழ்ந்து கொண்டு இருக்கும் கலைஞர் அவர்களின் ஆறாம் ஆண்டு நினைவு நாளான நாளை (7.8.2024 - புதன்கிழமை) காலை 9.00 மணியளவில் திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் மாவட்டக்

கழக செயலாளரும், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவருமான இல.பத்மநாபன் ஆகிய எனது தலைமையில் தாராபுரம் வடதாரையில் இருந்து அண்ணா சிலை வரை அமைதிப் பேரணியாக சென்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மரியாதை செலுத்திட திருப்பூர் தெற்கு மாவட்டம், தாராபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளை கழக நிர்வாகிகள், இந்நாள் முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி மக்கள் பிரதிநிதிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக பிரதிநிதிகள், கழக துணை அமைப்புகளின் இந்நாள், முன்னாள் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழகத்தின் செயல் வீரர்கள் கலந்து கொள்வதோடு பொதுமக்களும் பங்கு கொள்ளும் வகையில் மாவட்டக் கழகத்தின் சார்பாக தாராபுரம் வடதாரையில் இருந்து அண்ணா சிலை வரை நடைபெறும் அமைதி பேரணி நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்திட வேண்டும். மேலும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி அவரது நினைவை போற்றும் வகையில் சிறப்பாக ஏற்பாடு செய்து நடத்திட வேண்டுமென திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளரும், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவருமான இல.பத்மநாபன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேல்மலையனூர் ஒன்றியம்–

வடபாலையில் மக்களுடன் முதல்வர் திட்டம்!

அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்!

செஞ்சி, ஆக. 6 -

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம்வடபாலை ஊராட்சியில் மக்களுடன் முதல்வர் திட்டம் தொடங்கப்பட்டது. மாவட்டபிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலு வலர் தமிழரசன்தலைமை தாங்கினார். வட்டார கல்வி குழு தலைவர் நெடுஞ்செழியன் முன்னிலை வகித்தார்.

ஊராட்சி மன்ற தலைவர் சங்கீதா சீனிவா சன்அனை வரையும் வரவேற்றார். நிகழ்ச்சியில் சிறுபான்மை யினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு மக்களுடன் முதல்வர் திட்டத்தினை தொடங்கி வைத்தார்.

அப்போது நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான்:

பொது மக்களுக்கு வேண்டிய அனைத்து சேவைகள் மற்றும் கோரிக்கைகள் விரைவாக நிறைவேற்றிட வேண்டும் என்ற வகையில் மக்களுடன் முதல்வர் திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு .க . ஸ்டாலின் அவர்கள் ஊரகப் பகுதிகளில் செயல்படுத்துவதற்குஉத்தரவிட்டுள்ளார்.

அந்த வகையில் மேல்மலையனூர் ஒன்றியத்தில் வடபாலை, செவலபுரை, தென்பாலை, தொரப்பாடி, ஈய குணம், கடலி, மேலச்சேரி ஆகிய பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள்கோரிக்கை மனுக்கள் கொடுத்து பயன்பெறும் வகையில் அதிகமாக அணுகும் 15 அரசுத்துறைகள் சார்ந்த 44 சேவைகள் மீது தீர்வு காணப்பட்டு இம் முகாம்கள் தொடங்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அமைச்சர் செஞ்சி மஸ்தான் பொதுமக்கள கொடுத்த கோரிக்கை மனுக்கள் மீது ஒரு மாதத்தில் தீர்வு காணப்படும் என அவர் தெரிவித்தார்.

இதையடுத்து ஊரக வளர்ச்சித் துறை சார்பில்பிரதம மந்திரி ஜன்மன் திட்டத்தின் கீழ்48 பயனாளிகளுக்கு ரூபாய் 2 கோடியே 43 லட்சத்து 36 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய வீடுகள் கட்டுவதற்கான உத்தரவினையும், வருவாய்த் துறை மூலம் 5நபர்களுக்கு இலவச வீட்டு மனை பட்டாக்களையும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதி திட்டத்தின் கீழ்விபத்து நிவாரண உதவி தொகையாகஒருவருக்கு ரூபாய் 1 லட்சத்திற்கான காசோலையை பயனாளிகளுக்கு அமைச்சர் செஞ்சி மஸ்தான் வழங்கினார்

தொடர்ந்து மக்கள் நலவாழ்வுதுறை சார்பில்கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தையும் அவர்வழங்கினார்.

நிகழ்ச்சியில்வட்டாட்சியர் முகமது அலி, வட்டார வளர்ச்சி அலுவலர் சிவ சண்முகம்,ஒன்றிய துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன்,ஒன்றிய செயலாளர்கள் நாராயணமூர்த்தி, சாந்தி சுப்பிரமணியன், மாவட்ட கவுன்சிலர் செல்வி ராம சரவணன்,ஒன்றிய கவுன்சிலர்கள் காசியம்மாள் கோதண்டம்,கலா நாராயணமூர்த்தி, ஜெயலட்சுமி தஷ்ணாமூர்த்தி, ரவிசந்திரன் முரளி, ராஜா,ஊராட்சி மன்ற தலைவர்கள் முருகேசன், முனியம்மாள், பெருமாள், சசிகலா, சரோஜா, கோவிந்தம்மாள் திமுக நிர்வாகிகள் ஆறுமுகம், செந்தில்குமார், எஸ்.பி சம்பத்,உதயகுமார்,ஆர். செல்வம், ஜி.பி.எஸ். முருகன், பிரகாஷ் ,மாணவரணிஆறுமுகம்,உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள், திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். வட்டார வளர்ச்சி அலுவலர் சையத் முகமதுநன்றி கூறினார்.

ஈரோடு நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்ட மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதியில் கொடுமுடி ஒன்றியத்தில் அஞ்சு ஊர் ஊராட்சியில் 30 ஆயிரம் லிட்டர் டேங்க் தண்ணீர் தொட்டியினை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக கே.இ.பிரகாஷ் எம்.பி. நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

தஞ்சை ஏ.வி. பதி

ஆகஸ்ட் 6 (1996)

தஞ்சை மாவட்டக் கழக முன்னணித் தோழர்களில் ஒருவர். தஞ்சை நகர்மன்ற உறுப்பினர், நகர்மன்றத் தலைவர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்தவர்.

கழகம் தொடங்கிய நாள் முதல் தன்னை முழுமையாக கழகப் பணிகளில் ஈடுபடுத்திக் கொண்டவர்.

அறிஞர் அண்ணா அவர்களால் துவக்கப்பட்ட சீரணிப் படையில் தஞ்சை வட்டத் தலைவராக பொதுப்பணியாற்றியவர்.

பேரறிஞர் அண்ணா – தலைவர் கலைஞர் – மன்னை ஆகியோருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர்.

கழகம் நடத்திய அறப்போராட்டங்கள் அனைத்திலும் பங்கேற்று பலமுறை சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.